**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**முன்னிலை: திரு.செ.சுப்ரமணி, பி.ஏ., பி.எல்.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.II,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி (பொறுப்பு),**
**ஜெயங்கொண்டம்.**

**2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**2053 திருவள்ளுவராண்டு பிலவ வருடம் ஐப்பசி மாதம் 05–ம் நாள்**
**அசல் வழக்கு எண் – 422/2014**

1) பிரான்சிஸ் (இறந்தார்)
2) பால் ராபின்சன்
3) அக்னேஸ்மேரி
4) உர்சலா சமந்தா
5) பிளாரன்ஸ் ரோசரி

(2 to 5 parties Amended as per Order in IA 1/19 dt:18.09.2019) – வாதிகள்

/எதிர்/

1) அந்தோணிசாமி
2) செங்கோல்
3) மேரி
4) பெரிநாள் ஞானமணி – பிரதிவாதிகள்

------

இவ்வழக்கானது இன்று 22.10.2021ல் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.ராமலிங்கம் அவர்கள் முன்னிலையாகியும், 2–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முருகன் அவர்கள் முன்னிலையாகியும், 3–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.S.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையாகியும், 4–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், இன்று வழக்கின் தரப்பினர்களை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

தாவா சொத்துக்களில் வாதிக்கு கிராம வழக்கப்படி குடும்ப ஏற்பாட்டில் பிரித்துக் கொடுத்த பாதி பாகத்தினை உரிமை விளம்புகை செய்து, அதன் தொடர் பரிகாரமாக வாதியின் அனுபவத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அல்லது ஏஜெண்டுகளோ எவ்விதத்திலும் இடைஞ்சல்

செய்யாதிருக்க பிரதிவாதிகளுக்கெதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கியும், ஒருக்கால், தாவா சொத்துக்களில் குடும்ப ஏற்பாட்டில் வாதிக்கு பாதி பாகம் பிரிந்ததை மறுத்து பிரதிவாதிகள் நிரூபிக்கும் பட்சத்தில், மாற்றுப் பரிகாரமாக, தாவா சொத்துக்களில் வாதிக்குரிய 1/5 பாகத்தைப் பொறுத்து, பாக உரிமையை விளம்புகை செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், அதன் அடிப்படையில் சமூகம் கோர்ட் வழக்கறிஞர் ஒருவரை கமிஷனராக நியமனம் செய்து, தாவா சொத்துக்களில் METES AND BOUNDS–படி பிரித்து வாதிக்குரிய 1/5 பாகத்தைப் பிரித்து, தனிச் சுவாதீனம் ஏதுவாக பிரதிவாதிகளுக்கு எதிராக இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், தாவா செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவும் வாதியால் இத்தாவா தாக்கல்.

வாதிகளை விசாரணைக்கு அழைத்தபோது நீதிமன்றத்தின்முன்பு ஆஜரில்லை. வாதிகள் வழக்கறிஞர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. பிரதிவாதிகள் தரப்பிலும் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. எனவே இவ்வழக்கானது வாதிகளின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியாக்கம் செய்யப்பட்டு, பின்பு பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2021ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22–ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம்) மாவட்ட உரிமையியல் நீதிபதி (பொறுப்பு)
ஜெயங்கொண்டம்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>

–இல்லை–

(ஒப்பம்) மாவட்ட உரிமையியல் நீதிபதி (பொறுப்பு)
ஜெயங்கொண்டம்.